**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2024**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களிற்கு உரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி சேவைகள் கட்டளைகள் சட்டத்தின் (264 அதிகாரத்தின்) 62 ஆம் பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றை வழங்க போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயத்தை வெளியிடுகிறேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதியத்தால் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் வைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகளுக்குரிய மற்றும் மீளாய்வாண்டிற்கு உரியதாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 73,002,313 பங்களிப்புப் பணம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி சேவை ஓய்வூதியம் பெறுகின்ற நலனாளிகளுக்காக மாதாந்தம் ஓய்வூதியம் செலுத்துதல் 2011 ஆம் ஆண்டில் இருந்து படிப்படியாக அருகிச் சென்று தற்போது செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற இந்த நிதியம் பயன்படுத்தபடாது இருந்தமையால் ஓய்வூதியம் செலுத்துதல் அட்டுறு அடிப்படையின் பிரகாரம் சீராக்கம் மேற்கொள்ளப்படுவது இல்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் வருமானம், செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி 2024 ஆம் ஆண்டில் ஓய்வூதியக்காரர்களுக்காக ரூபா 913,923,665 பங்களிப்பு பணம் செலுத்தப்பட்டிருந்தது. உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து ஆண்டில் பங்களிப்பு பெறுவனவு ரூபா 73,002,313 ஆக இருந்ததுடன் ஓய்வூதிய நிதியத்தில் இருந்து செலுத்துதல் ஆக அந்த நிதிய | குறிப்பு 02 இல் இலக்கம் 03 இன் கீழ் கணக்கீட்டு குறிப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வருமான செலவினக் கணக்கில் பங்களிப்புப் பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் விளைவுகள் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பு பணத்தை பெற்றுக் கொள்வதற்கு எதிராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த பெறுவனவுகள் ரூபா 73,002,313 இல் ரூபா 14,732,111 தொகை முன்னைய ஆண்டுக்கான பெறுவனவாக இருந்த போதிலும் அப்பெறுமதி, பற்றாக்குறை திரண்ட நிதியத்திற்கு மாற்றலாக வருமான செலவினக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு இணங்க வருமான செலவினக் கணக்கில் மிகை அல்லது பற்றாக்குறை திரண்ட நிதியத்தில் சீராக்கப்படுகின்றது. | ஆண்டிற்குரிய பங்களிப்புப் பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளின் அடிப்படையில் வருமான செலவினக் கணக்கின் மிகை அல்லது பற்றாக்குறை திரண்ட நிதியத்தில் சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | கருத்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய பங்களிப்புப் பணம் | 856,093,490 | 156,162,270 | 699,931,220 | 2024 திசெம்பர் அனுப்பப்பட்ட காசோலை 2025 சனவரி மாதம் எங்களுக்கு கிடைத்ததன் காரணமாக 2024 திசெம்பர் கணக்கீடு செய்யப்படாமையின் அடிப்படையில் இந்த வேறுபாடு எழுந்திருந்தது. | மீதிகளை உறுதிப்படுத்துவதன் மூலம் பெறவேண்டிய பங்களிப்புப் பணத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய பங்களிப்பு பணம் | 101,640,065 | 107,596,345 | 5,956,280 | 2024 ஆம் ஆண்டின் இறுதி மூன்று மாதத்திற்கு உரிய மரணங்களை நீக்குதல் 2024 திசெம்பர் பட்டியலில் மேற்கொள்ளப்பட்டதுடன் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறிவித்தல் 2025 சனவரி மேற்கொள்ளப்படுகின்றமையால் நிதியத்தின் மீதி குறைவாகக் காண்பிக்கப்படுகின்றது. | -மேற்படி- |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பெற வேண்டிய பங்களிப்பு பணம் | 429,754,794 | மீதி உறுதிப்படுத்தல் | எதிர்காலத்தில் இந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து மீதி அறிக்கை பெறப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதன் மூலம் பெற வேண்டிய பங்களிப்பு பணத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 303 உள்ளூராட்சி நிறுவனங்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பங்களிப்பு பண மீதி ரூபா 1,053,748,746 ஆக இருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டில் எந்த ஒரு பங்களிப்புப் பணமும் கிடைக்காதிருந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 74 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 283,979,179 ஆகும் | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கடிதம் மூலமும், தொலைபேசி அழைப்புக்கள் மூலமும் உள்ளூராட்சி நிறுவன உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்தி பெறவேண்டிய பங்களிப்பு பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறவேண்டிய பங்களிப்புப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 50 உள்ளூராட்சி நிறுவனங்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய பங்களிப்புப் பணம் ரூபா 988,462,216 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் காணப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2024 திசெம்பர் அனுப்பப்பட்ட காசோலை 2025 சனவரி எங்களுக்கு கிடைத்ததன் காரணமாக 2024 திசெம்பர் கணக்கீடு செய்ய முடியாமையின் அடிப்படையில் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய பங்களிப்பு பணத்தை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 யூலை 29 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் | 2016 பாதீட்டு முன்மொழிவு இலக்கம் 425 மற்றும் 426 இன் மூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்ட | பொதுத் திறைசேரியினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் 2017 மார்ச் 31 ஆந் திகதி | ஆலோசனையின் பிரகாரம் நிதியத்தை மூடுவதற்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| 07/2016 என்ற சுற்றறிக்கை | முறைமைக்கு இணங்க சகல நியதிச் சட்டம் மற்றும் நியதிச் சட்டம் அல்லாத நிதியங்கள் பாராளுமன்ற நிர்வாகத்தின் கீழ் உறுதிப்படுத்தும் வகையில் பொதுத் திறைசேரியால் 2016 யூன் 11 ஆந் திகதி விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன் அந்த குழுவினால் இந்த நிதியத்திற்குரிய சட்டங்கள் திருத்தப்பட்டு மூடப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த அறிக்கையில் நிலுவைப் பங்களிப்புப் பணம் உரிய நிறுவனங்களிடம் இருந்து விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | விநியோகிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்தை உள்ளடக்கிய நிதியம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மூட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அந்த அறிக்கை தொடர்பாக ஏதாவது கொள்கைத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டு அமுல்படுத்துவதற்காக அதிகாரம் வழங்குதல் தொடர்பான அறிக்கை காணப்படாமையினால் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரித்து உரிய பிரகாரம் புத்தகங்களில் பேணிச் செல்லப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,732,110 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 16,701,878 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,969,768 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பங்களிப்பு பண வருமானம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு முதல் அங்கத்தவர்களின் பெயர்ப் பதிவேடு பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் அந்த பெயர்ப் பதிவேட்டில் மரணமடைந்த ஓய்வூதியதாரர்களின் பெயர் நீக்கப்படாமையினால் நாளது வரையாக்கப்பட்ட அங்கத்தவர்களின் பெயர்ப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நாளது வரையாக்கப்பட்ட அங்கத்தவர்களின் பெயர் பதிவேடு மென்பொருள் பிரதி ஒன்று பேணிச் செல்லப்படுகின்றது. | அங்கத்தவர்களின் பெயர்களை உள்ளடக்கிய பெயர்ப் பதிவேடு நாளதுவரையாக்கப்படல் வேண்டும். |